# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1759/35 - 2012 මැයි මස 25 වැනි සිකුරාදා - 2012.05.25

*1759/35 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 6/1996.*

**1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

அறிவிப்பு

**(முதலாம் அட்டவணையின் (1) ஆம் பந்தி)**

*நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் (1) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக மூன்று மில்லியன் ரூபா என்ற பணத்தொகைக்குப் பதிலாக 2012, மே 31 ஆந் திகதியிலிருந்து ஐந்து மில்லியன் ரூபா என்ற தொகையை இவ்வறிவிப்பின்மூலம் நிர்ணயிக்கின்றேன்.*

*இந்நாணயப் பெறுமதி அதிகரிப்புச் செய்தல் 2012, மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளுக்காக ஏற்புடையதாகாது.*

*1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்டதும், 1996, ஒற்றோபர் 1 ஆந் திகதிய 943/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான அறிவிப்பு, அதன் கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றது.*

*ரவூப் ஹக்கீம்,*
*நீதி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012, மே 18.*

*6 - 424*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*